**காவல் கண்காணிப்பாளர், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு.சமய் சிங் மீனா, இ.கா.ப**

ந.க.எண்:அ3/7391/2022

மாவட்ட ஆணை எண்: 119 /2024

நாள்: 20.03.2024

சிறு தலைப்பு: காவல் - கள்ளக்குறிச்சி மாவட்டம் - கருணை அடிப்படையில் பணிநியமனம் - கணினி விபர பதிவு ஊழியர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திரு.K.தனஞ்செழியன் த/பெ மறைந்த A.கலியபெருமாள், தலைமைகாவலர்-561 என்பவரின் தற்காலிக பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1.தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்:1433/ சி.ஏ.1/2005/3, நாள்:13.07.2005

2.தலைமை அலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்:1816770/என்.ஜி.பி2(2)/2021-15, நாள்:07.05.2022

3. தலைமை அலுவலகத்திற்கு முகவரியிடப்பட்ட இவ்வலுவலக கடிதம் இதே எண், நாள்:15.05.2023

4. அரசு கடித எண். 75466/காவல்-15/2021-2, நாள்:10.11.2023

5.தலைமையலுவலக குறிப்பாணை ந.க.எண்:4751838/சி.ஏ.ஆர்-2023, நாள்:04/03/2024

---------

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. திரு.K.தனஞ்செழியன், த/பெ மறைந்த A.கலியபெருமாள், தலைமைகாவலர்-561 என்பவர் பார்வை 1-ல் கண்ட தலைமை அலுவலக குறிப்பாணை ந.க.எண்: 1433/CA-1/2005-3, நாள்: 13.07.2005 மற்றும் கடலூர் மாவட்ட ஆணை எண்:781/2005, ந.க.எண்: அ2(2)/4409/2005, நாள்: 18.08.2005 ஆகிய ஆணைகளின் படி 22.08.2005 முற்பகல் கணினி விவர பதிவாளராக கடலூர் மாவட்டத்தில் பணியமர்த்தப்பட்டு கடலூர் மாவட்ட ஆணை எண்:316/2016 ந.க.எண்: N2/8510/2016, நாள்:29.03.2016-ன் படி 01.05.2007 முற்பகல் முதல் கணினி விவர பதிவாளர் தரத்தில் பணி வரன்முறைப்படுத்தியும் மற்றும் 31.01.2009 பிற்பகல் தகுதிகாண்பருவம் முடித்தும் ஆணையிடப்பட்டுள்ளது.

2) மேற்படி திரு.K.தனஞ்செழியன், இளநிலை உதவியாளர் என்பவருக்கு பார்வை 2-ல் கண்ட தலைமையலுவலக பணிநியமன ஆணை ந.க.எண்:1816770/என்.ஜி.பி2(2)/2021-15, நாள்:07.05.2022-ன்படி கணினி விவர பதிவாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளர் பதவிக்கு பணிநியமனம் செய்யப்பட்டு 20.05.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக இம்மாவட்ட காவல்அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

3) மேலும், பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின் படி மேற்கண்ட இளநிலை உதவியாளருக்கு பணிவரன்முறை அரசளவில் பதிவு செய்ய தலைமையலுவலகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டது.

4) தற்போது, பார்வை 4-ல் காணும் அரசு கடிதத்தின்படி கருணை அடிப்படையில் கணினி விவர பதிவாளராக பணிநியமனம் செய்யப்பட்டு எவ்வித விதி தளர்வுகளும் இல்லாத நேர்வுகளில் பணிநியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யப்பட்ட தனியர்களின் நேர்வுகளை அரசளவில் பதிவு செய்ய தேவையில்லை என பார்வை 5-ல் காணும் தலைமையலுவலக குறிப்பாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) எனவே, எவ்வித விதி தளர்வுகளும் இல்லாத நேர்வுகளில் திரு.K.தனஞ்செழியன், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணிக்கு அறிக்கை செய்த நாளான 20.05.2022 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது. மேற்படி, இளநிலை உதவியாளர் தனது பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் இரண்டு ஆண்டு காலம் பணியினை திருப்திகரமாக நிறைவு செய்வதுடன் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்வதுடன் பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படை பயிற்சியினையும் நிறைவு செய்து தேர்ச்சி பெறும் வரை தகுதிகாண்பருவத்தினராக கருதப்படுவார் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

6) இவ்வாணையினை பெற்றுக்கொண்டமைக்கு ஏற்பளிக்கவும்.

ஓம்/-சமய் சிங் மீனா
காவல் கண்காணிப்பாளர்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

<u>பெறுநர்:</u>

திரு.K.தனஞ்செழியன், இளநிலை உதவியாளர், மாவட்ட காவல் அலுவலகம், கள்ளக்குறிச்சி.

<u>நகல்:</u>

காவல் துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை - 04

B1, B2, A6 உதவியாளர்கள், மாவட்ட காவல் அலுவலகம், கள்ளக்குறிச்சி.

மாவட்ட ஆணைப்புத்தகம்

பணிப்புத்தகம் மற்றும் இருப்புக்கோப்பு

//உ.ந.உ.ப.அ//

நிர்வாக அதிகாரி